## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண். 12/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. ராஜா முகமது, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு ஜுலை மாதம் 21-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 21.07.2023**

**பெயர் - தேவன்**

**த/பெ - கோவிந்தன்**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 12.34 p.m.**

**குறுக்கு விசாரணை -**

1. நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் வழக்கு சொத்து எனது தாத்தா சொத்து அதில் பிரச்சனை ஏற்ப்பட்டதால் வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் 2.42 ஏக்கர் ஆகும். வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 495/2 ஆகும். வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் என்னவென்றால் அது தெரியாததால் தான் வழக்கு தாக்கல் செய்தேன். நான் தாவா சொத்தில் எத்தனை வருட காலமாக அனுபவத்தில் இருக்கிறேன் என்றால் 1912ல் இருந்து எனது தாத்தாவிடம் தான் சொத்து இருந்தது இன்று வரை எங்களிடம் உள்ளது. வழக்கு சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதற்கு ஆதாரமாக ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு உள்ளதால் வருவாய் துறையில் ஆவணங்கள் கேட்டு வாங்க இயலவில்லை.

2. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு சம்மந்தமில்லா ஆவணங்கள் என்றால் சரியல்ல. எனது வழக்கில் சொத்துவிவரத்தில் 4 எல்லை விவரம் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை, அதனால் குறிப்பிடவில்லை. பிரதிவாதியின் அனுபவத்தில் தாவா சொத்து எவ்வளவு சென்ட் உள்ளது என்றால் தாவா சொத்தில் பிரதிவாதிகள் அனுபவத்தில் இல்லை. பிரதிவாதிகள் தாவா சொத்தின் ஒரு

பகுதியான 38 செண்ட் நிலத்தில் கடந்த 40 வருட காலமாக ஆண்டுஅனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்களும் பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. இன்றைய தேதிவரை வரி வகையராக்களை பிரதிவாதிகள் தான் மேற்படி 38 செண்ட் நிலத்திற்கு செலுத்திவருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பட்டா என் பெயரில் உள்ளதா என்றால் இல்லை எனது தாத்தா பெயரில் உள்ளது. வழக்கு சொத்தானா 2.42 ஏக்கர் நிலத்தில் கிரமாத்தில் உள்ள பலபேர் அனுபவத்தில் உள்ளனர் என்றால் சரியல்ல.

3. எனது பிரமான வாக்குமூலத்தில் அசல் வழக்கு எண் 64/2016 என்ற வழக்கினை குறிப்பிட்டுள்ளேன் என்றும் அது குறித்து கூற இயலுமா என்றால் சரியாக நினைவில் இல்லை மேற்படி அசல் வழக்கு எண் 64/2016யை கோவிந்த சாமி தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் எத்தனையாவது பிரதிவாதி என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. மேற்படி வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அசல் வழக்கு என் மீது மட்டும் தாக்கல் செய்யப்பட்டதா அல்லது எனது குடும்பத்தினர் மீதும் தாக்கல் செய்யப்பட்டா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கு சொத்தில் மேற்படி 38 செண்ட் நிலத்தில் பிரதிவாதிகள் அனுபவத்தில் இருப்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம்- 12.47 p.m.**